1993 ஏப்ரல் 27]

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

494—

வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்தில் ஐ.சி.டி.எஸ். திட்டத்தை அமுல்படுத்துதல்

*10282—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்தில் ஐ.சி.டி.எஸ். திட்டம் அமுல்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி வத்தல குண்டு ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் Tamil Nadu Integrated Nutritious Project (TINP) இயங்கி வருவதால் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் Integrated Child Development Services Scheme (ICDSS) அமுல்படுத்தும் செயற்குறிப்புக்கு இப்போதைக்கு அவசியம் இல்லை.

497—

இராஜபாளையம் நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுதல்

*10854—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம், இராஜபாளையம் நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(29-ஆவது பட்டியல்)

1—

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் என்றிருப்பதை மாற்றி டாக்டர் அம்பேத்கார் என்ற பெயரைச் சேர்த்தல்

வினா எண் 11940—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் என்றிருப்பதை டாக்டர் அம்பேத்கார் என்று டாக்டர் பட்டத்தைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

இல்லை.

2—

உடைய நாட்டை ரெவின்யூ கிராமமாக்கும் திட்டம்

வினா எண் 11950—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாட்டை ரெவின்யூ கிராமமாக்க 1992–93-ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

இல்லை.